**செய்தி வெளியீடு – 708** **13.10.2009**

**பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக பணியாளர்கள் 83 பேருக்கு 20 சதவீத போனஸ் மற்றும் கருணைத் தொகை 6 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய்!**

**முதலமைச்சர் கலைஞர் ஆணை!**

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவுகளைச் சேர்ந்த 83 பணியாளர்களுக்கு போனஸ் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள ஊதிய உச்சவரம்பான 10 ஆயிரம் ரூபாய் என்பதைத் தளர்வு செய்து 8.33 சதவீத போனஸ் மற்றும் 11.67 சதவீத கருணைத் தொகை சேர்த்து மொத்தம் 20 சதவீத போனஸ் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (13.10.2009) ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின்படி, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு பணியாளர்கள் 83 பேருக்கு 6 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் 2008–2009 ஆம் ஆண்டுக்கான போனஸாக வழங்கப்படும்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9